# செய்திகளும் குறிப்புகளும்

**20.02.2025, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1096**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**22. ஆன்மீக உருமாற்றத்தின் இன்றியமையாமை**

ஆகையால் மனிதனுடைய முழுமை தூலவாழ்க்கையின் ஒளிபெறாத அஞ்ஞான வட்டத்தைப் பின் தொடர்வதில் இருக்கமுடியாது. அல்லாமலும் மன ஜீவனின் அதிக அகன்ற வட்டங்களிலும் அதைக் காணமுடியாது, ஏனென்றால் அதுகூடக் கருவியாகப் பயன்படுவதுதான், மேலும் அது அதற்கப்பாலுள்ள வேறு ஏதோ ஒன்றை நோக்கிய சார்புடையது, அந்த ஒன்றின் சக்தி உண்மையிலேயே, அதனுள் செயற்படுகிறது, ஆனால் அதனுடைய விரிவான உண்மை இப்போதைய மனித அறிவைக் கடந்த உணர்வுநிலையானது, அது அதிமன உணர்வு நிலையானது. மனிதனின் முழுமை எப்பொழுதும் முழுமையாயுள்ள சித்பொருளின் படிப்படியான வெளிப்பாட்டில் அமைந்திருக்கிறது.

தாவர இனத்திலும் விலங்கினத்திலும் உள்ள தாழ்ந்த இயற்கையின் முழுமை, ஒவ்வொன்றிலும் அதன் சொந்த ஜீவனின் பிராணத்துவ உண்மைக்கு ஓர் இயலறிவான ஒரு தன்னியல்பான அடிமனம் சார்ந்த கீழ்ப்படிதலிலிருந்து வருகிறது. ஆன்மீக வாழ்க்கையின் உயர்ந்த முழுமை, ஆன்மீக மயமாக்கப்பட்ட மனிதன், அவன் உணரப்பெற்ற அவனுடைய சொந்த ஆன்மாவின் உண்மைக்கு தன்னியல்பாகக் கீழ்ப்படிதல், இது அவன் ஆன்மாவாக ஆகும்போது, அவன் தனக்குரிய உண்மையான இயற்கையைக் கண்டுபிடிக்கும் போது வரும். இந்தத் தன்னியல்பு இயலறிவானதாக மற்றும் அடிமனத்தைச் சார்ந்ததாக இருக்காது. அது நேர்காணலைச் சார்ந்ததாகவும் மற்றும் முற்றிலும் முழுமையாக உணர்வுள்ளதாகவும் இருக்கும். அது ஆன்மீக ஒளியின் ஒரு தன்னியல்பான தத்துவத்திற்கு, ஓர் ஒருங்கிணைந்த மற்றும் முழுமையாக்கப்பட்ட உச்ச உண்மையின் சக்திக்கு, அகன்றவிரிவான அழகுக்கு, நன்மைக்கு, ஆற்றலுக்கு, மகிழ்ச்சிக்கு, அன்பிற்கு, ஒருமைக்கு ஓர் ஆனந்தமான கீழ்ப்படிதலாக இருக்கும். வாழ்க்கையில் இந்த சக்தி செயற்படுவதன் நோக்கம், எல்லா வாழ்க்கையையும் போலவே வளர்ச்சி, உடைமையாக்கல், இன்பநுகர்ச்சியாக இருக்கும், இருந்தேயாகவேண்டும்; ஆனால் வளர்ச்சி தெய்வீக வெளிப்பாடாக, உடை மையாக்குதலும் இன்பநுகர்ச்சியும் ஆன்மீகமானதாகவும், பொருள்களில் உள்ள சித்பொருள் சார்ந்ததாகவும் இருக்கும். - இன்பநுகர்ச்சி நம் வாழ்க்கையின் மன, பிராண மற்றும் தூலச் சின்னங்களை நம்பியிராமல், ஆனால் அவற்றைப் பயன்படுத்தும் ஓர் இன்பநுகர்வாக இருக்கும். அதைவிட்டு விலகுதல் ஓர் ஆபத்தாகவும் ஒரு குழப்பமாகவும் இருக்கக்கூடிய ஒரே மாதிரியான வடிவங்கள் மற்றும் ஒரே வட்டத்தில் திரும்பத்திரும்ப இயங்கும் செயல்பாடுகளைச் சார்ந்திருக்கும் தடைப்பட்ட வளர்ச்சியின் வரையறைக்குட்பட்ட முழுமையாக இது இராது. அது தன்னுடைய வடிவங்களில் முடிவில்லாத மாறுபாடுகளைக் கொள்ளும் திறமையைக் கொண்ட ஓர் எல்லையற்ற முழுமையாக இருக்கும்,- ஏனென்றால் சித்பொருளின் வழிகள் எண்ணற்றவையாக மற்றும் முடிவற்றவையாக இருக்கின்றன -ஆனால் அனைத்து மாறுபாடுகளிலும் உறுதியுடன் மாறாமல் அதேயாக இருக்கிறது, ஒன்றேயாக, ஆனால் எண்ணிறந்த வகையில் முடிவற்றதாக உள்ளது.

ஆகையால் இந்த முழுமைகூட மனக்கருத்து சித்பொருளைக் கையாள்வதால், கையாள்வதைப் போல, வாழ்க்கை வந்துவிடாது. மனதில் இருக்கும் கருத்து, சித்பொருளில் உள்ள மைய விருப்பாற்றலைக் (central will) கைப்பற்றி, இந்த உயர்சக்திக்கு ஓர் உணர்வுள்ள போக்கையும் முறையையும் அறிவாற்றலுக்கு ஏற்பக் கொடுக்க முயல்வது, மிகவும் குறுகியதாக, மிகவும் இருண்டதாக மிகவும் வறிதான ஓர் ஆற்றலாக இருப்பதால், அது இந்த அற்புதத்தை சாதிக்க முடியாது. நாம் சித்பொருளை,ஏதோ ஒரு நிலையான மனக்கருத்து, அல்லது மத வழிபாட்டமைப்பு, அறிவாற்றல் உண்மை, அழகுணர்வுத்தரம், நன்னெறிவிதி, நடைமுறைச் செயல், பிராண மற்றும் தூல வாழ்க்கையின் வழி, குறிப்பிட்ட வடிவங்கள் அல்லது செயற்பாடுகளின் ஓர் ஒழுங்கு, இவற்றோடு பிணைத்து, மேலும் அதிலிருந்து மாறுபடும் அனைத்துச் செயல்களும் ஓர் ஆபத்து மற்றும் குழப்பம் அல்லது ஆன்மீக வாழ்விலிருந்து விலகுதல் என்று சாற்றினால் அது இன்னமும் குறைவானதாகவே இருக்கும். அதுதான் ஆசியாவில் செய்யப்பட்ட பிழையாகும், மேலும் அதனுடைய தடைப்பட்ட வளர்ச்சி மற்றும் சரிவுக்கும் அதுவே காரணமாகும்; ஏனென்றால் இது உயர்ந்தவற்றைத் தாழ்ந்த தத்துவங்களுக்கு அடிமைப்படுத்தலாகும்; மேலும் தானாக வெளிப்படுத்திக்கொள்ளும் சித்பொருளை மனம் மற்றும் பிராண இயற்கையுடன் ஒரு தற்காலிகமான மற்றும் அரைகுறையான சமரச உடன்பாட்டில் கட்டிப்போடுவதாகும். மனிதனுடைய உண்மையான சுதந்தரம் மற்றும் முழுமை, உள்ளிருக்கும் சித்பொருள், மனத்தின் மற்றும் பிராணனின் வடிவங்களூடே வெடித்து வெளியேறி விசும்பில் அதற்கே உரிய சுடரிடும். தெய்விக உயரத்திற்கு மேலே சிறகடித்துச் சென்று, அந்த ஒளி மற்றும் அனற் பிழம்பிலிருந்து அவற்றைக் கைப்பற்றித் தன்னுடைய சொந்த வடிவத்தில் அவற்றை உருமாற்றம் செய்ய அவற்றின் மீது திரும்புகின்றபொழுது வரும்.

உண்மையில், நாம் கண்டதைப் போல, மனமும் அறிவாற்றலும் நம்முடைய இருக்கையின் திறவுகோலான ஆற்றல் அல்ல. ஏனென்றால், அவை அரை -உண்மைகளின் மற்றும் நிச்சயமின்மைகளின் ஒரு வட்டத்தையே குறித்துக்காட்டும், மேலும் அந்த அதிருப்தியான வட்டத்திலேயே சுற்றிவரும். ஆனால் மனதிலும் வாழ்க்கையிலும், மற்றும் அறிவாற்றல், அழகுணர்வு, நன்னெறி, இயங்காற்றல் மற்றும் நடை முறை, புலனுணர்ச்சிகள், பிராண மற்றும் தூல ஜீவன் இவற்றின் அனைத்துச் செயல்களிலும் மறைந்துள்ள ஆற்றல் ஒன்றுள்ளது; அது ஐக்கியப்படுதல் மற்றும் நேர்காணல் மூலம் அறிகிறது; மற்றும் அது இவை அனைத்திற்கும் அவை பெறக்கூடிய திறமைக்கேற்ப, அந்த அளவு உண்மை மற்றும் அந்த அளவு உறுதி மற்றும் திடத்தைக் கொடுக்கிறது. நாம், இப்பொழுது, நம்முடைய விஞ்ஞானம் மற்றும் தத்துவம் மற்றும் நம்முடைய பிறசெயல்களின் பின்னால், தெளிவற்ற முறையில் இத்தகைய ஏதோ ஒன்றைக் காணத்தொடங்கியுள்ளோம். ஆனால் இந்த ஆற்றல் தனக்காகவன்றி, மனதிற்காகவும் வாழ்க்கைக்காகவும் செயற்படும் வரை, தனக்கே தன்னியல்பான ஒளியில் அன்றி அவற்றின் வடிவங்களில் செயலாற்றும் வரை, இந்தக் கண்டுபிடிப்பினால் எந்தவொரு பெரும் பயனையும் அடைய முடியாது, அந்த உள்ளார்ந்த தெய்வத்திற்கே உரிய நலத்தைப் பெற முடியாது. மனிதன் தான் இதுவரை வளர்த்துள்ள அனைத்தும், அவன் அவ்வளவு நியாயமாக ஆனால் வீண்மையுடன் பெருமைகொள்ளும் அறிவாற்றல் உட்பட, இப்பொழுது இனியும் அவனுக்கு போதுமானதாகாது என்றும் உள்ளுக்குள் இருக்கும் இந்த உன்னத ஒளியை வெளியே கொண்டுவருதல், கண்டுணர்தல் மற்றும் விடுவித்தலே இனி தனது ஊடுருவிப் பரந்திருக்கும் முன்னீடுபாடாக இருக்கும் என்றும் துணிச்சலுடன் சாற்றும் பொழுது, அதிமனிதத்தன்மைக்குரிய வழி திறக்கும். அதன்பிறகு, அவனுடைய தத்துவம், கலை, விஞ்ஞானம், நன்னெறி, சமுதாயவாழ்வு பிராணத்துவ ஈடுபாடு, ஒரு போதும் மனம் மற்றும் வாழ்க்கையின் முயற்சியாக, அவற்றுக்காகவே செய்யப்படும், ஒரு வட்டத்தில் சுமந்து செல்லப்படும் செயல்பாடாக இராது; ஆனால் மனம் மற்றும் வாழ்க்கையின் பின்னால் உள்ள ஓர் உன்னத உண்மையைக் கண்டுணர ஒரு வழிவகையாகும்.

*(தொடரும்.....)*

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: பிப்ரவரி 21 வெள்ளிக்கிழமை மாலை 7:30 மணிக்கு**
சிறப்புத் திரைப்படக் காட்சி: பிப்ரவரி 21 முதல் 23 வரையிலான வார இறுதியில் ஆரோ:பிலிம் வழங்கும் மத்திய கிழக்கு மினி திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக, **"தி ஸீட் ஆ:ப் தி சேக்ரட் :பிக்" (The Seed of the Sacred Fig)** (பாரசீகம்: **دانه انجیر معابد**).
இயக்கம் - **முகமது ரசூலோ:ப்.** ஈரான், ஜெர்மனி, பிரான்ஸ், 2024
நடிப்பு: சோஹைலா கோலெஸ்தானி, மிசாக் ஜரே, மஹ்சா ரோஸ்டாமி, செடரே மாலேகி, நியோஷா அகூஷி, அமினே அரானி.
*கதைச்சுருக்கம்:* இதன் கதை தெஹ்ரானில் உள்ள புரட்சிகர நீதிமன்றத்தில் ஒரு விசாரணை நீதிபதியான இமானை மையமாகக் கொண்டுள்ளது, அவர் ஒரு இளம் பெண்ணின் மரணம் காரணமாக நாடு தழுவிய அரசியல் போராட்டங்கள் தீவிரமடைந்து, அவரது துப்பாக்கி மர்மமான முறையில் மறைந்து, அவரது மனைவி மற்றும் மகள்களை அவநம்பிக்கை கொள்ளச் செய்யும்போது சித்தப்பிரமையுடன் போராடுகிறார். கற்பனையான கதை ஈரானிய அதிகாரிகளால் வன்முறையில் அடக்கப்பட்ட 2022-2023 ஈரானில் நடந்த போராட்டங்களின் உண்மையான படங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஈரானிய சர்வாதிகார ஆட்சியின் கீழ் இரகசியமாக படமாக்கப்பட்ட இந்த படம், "குடும்ப அலகு பற்றிய கூர்மையான ஆய்வுடன் இணைந்த ஒரு இடைவிடாத த்ரில்லர் போலவே அரசியல் மற்றும் பெண்ணிய துண்டுப்பிரசுரமாகும். ஒரு சக்திவாய்ந்த மற்றும் அவசியமான படைப்பு"
இந்த படம் 77வது கேன்ஸ் திரைப்பட விழாவின் சிறப்பு ஜூரி பரிசை வென்றதன் மூலம் பாம் டி'ஓருக்கு பரிந்துரைக்கப்பட்டது. மேலும் 97வது அகாடமி விருதுகளில், இது சிறந்த சர்வதேச திரைப்படத்திற்காக பரிந்துரைக்கப்பட்டது.
*ஆங்கிலத் துணை வாசகங்களுடன் அசல் பாரசீக மொழிப்படம். கால அளவு: 2 மணிநேரம் 48 நிமிடம்.*
***குறிப்பு:*** நன்கொடைத்தொகைகள் மிகவும் வரவேற்கப்படுகின்றன! - *ஆரோ:பிலிம் கலைக்கூஷன் கணக்கு எண். 252658*

**குறிப்பு:** பிப்ரவரி 28 வெள்ளிக்கிழமை அன்று திரைப்படக் காட்சி இல்லை. உங்களுக்கு பிறந்தநாள் வார வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கு அடுத்த வாரம் சந்திப்போம்!

**ஆரோ:பிலிம் - சையரின் ஒரு துணைப் பிரிவான ஆரோ:பிலிம் வழங்கும் - மத்திய கிழக்கு மினி திரைப்பட விழா**



மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த திரைப்படங்களை மையமாகக் கொண்ட தனது மினி திரைப்பட விழாவை பிப்ரவரி 21 முதல் 23 வரை அறிவிப்பதில் ஆரோ:பிலிம் மகிழ்ச்சியடைகிறது.

பிப்ரவரி 21 வெள்ளிக்கிழமை இரவு 7:30 மணிக்கு எம்எம்சி ஆடிட்டோரியத்தில், விழாவைத் தொடங்குவோம், பிப்ரவரி 22 சனிக்கிழமை மற்றும் பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை கலாபூமியில் உள்ள ஆரோ:பிலிமின் ஸ்டுடியோவில் பிற்பகல் 3:00 மணி மற்றும் மாலை 5:00 மணிக்கு தினந்தோறும் இரண்டு திரைப்படக் காட்சியை வழங்குவோம். (குறிப்பு: இட கேன்களில் அதிகபட்சம் 30 பேர் மட்டுமே கலந்து கொள்ளலாம்)

**கீழே திரைப்படக் காட்சிகள் பற்றிய முழு விவரங்களைப் பார்க்கவும்:**

*மொத்தம் 5 திரைப்படங்கள் காண்பிக்கப்படும். இத்திரைப்படக் காட்சிகள் இரண்டு இடங்களில் காண்பிக்கப்படும்.*

*பிப்ரவரி 21 வெள்ளிக்கிழமை அன்று எம்எம்சி ஆடிட்டோரியத்திலும் (டவுன் ஹால்), பிப்ரவரி 22 சனிக்கிழமை & பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை ஆரோ:பிலிம் ஸ்டுடியோவிலும் காண்பிக்கப்படும் (கலாபூமி). ஆரோ:பில்ம் ஸ்டுடியோவில் (கலாபூமி) 30 இருக்கைகளே உள்ளன!*

**பிப்ரவரி 21 வெள்ளிக்கிழமை அன்று எம்எம்சி ஆடிட்டோரியம்** (டவுன் ஹால்): **இரவு 7.30 மணிக்கு, "தி ஸீட் ஆ:ப் தி சேக்ரட் :பிக்" (The Seed of the Sacred Fig)** (பாரசீகம்: **دانه انجیر معابد**).
இயக்கம் - **முகமது ரசூலோ:ப்.** ஈரான், ஜெர்மனி, பிரான்ஸ், 2024. நடிப்பு: சோஹைலா கோலெஸ்தானி, மிசாக் ஜரே, மஹ்சா ரோஸ்டாமி, செடரே மாலேகி, நியோஷா அகூஷி, அமினே அரானி.
*ஆங்கிலத் துணை வாசகங்களுடன் அசல் பாரசீக மொழிப்படம். கால அளவு: 2 மணிநேரம் 48 நிமிடம்.* இப்படத்தைப் பற்றிய முழு விவரத்தையும் மேலே பார்க்கவும்.

**பிப்ரவரி 22 சனிக்கிழமை, ஆரோ:பில்ம் ஸ்டுடியோ (கலாபூமி): பிற்பகல் 3:00 மணி. "பேப் அஸீஸ்"** (**BAB AZIZ)** (ஆங்கிலம்: **The Prince that contemplated his soul).** *இயக்கம்* - **நாசர் கெமிர்,** ஈரான், துனிசியா, 2005. *நடிப்பு:* பர்விஸ் ஷாஹின்கோ, மரியம் ஹமீத் ஹொசைன், பனாஹி நெசிம் கலோல். *ஆங்கிலத் துணை வாசகங்களுடன்* - அசல் பாரசீகம், துனிசியா, அரபு மொழிகளில் வெளிவந்த படம். *கால அளவு: 1 மணி நேரம் 38 நிமிடம்.*

**மாலை 5:00 மணி. "வெஸ்ட் பெய்ரூட்" (WEST BEIRUT)** (பிரெஞ்சு: À l'abri les enfants, அரபு: بيروت الغربية). *இயக்கம்:* **ஜியாத் டூயரி,** லெபனான், 1998. *நடிப்பு:* ராமி டூயரி முகமது, சாமாஸ் ரோலா அல் அமீன்.
*ஆங்கிலத் துணை வாசகங்களுடன்* அசல் அரபு மற்றும் பிரெஞ்சு மொழிப்படம். *கால அளவு: 1 மணி நேரம் 45 நிமிடம்.*

**பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை, ஆரோ:பில்ம் ஸ்டுடியோ (கலாபூமி): பிற்பகல் 3:00 மணிக்கு - "ஐஸ்டில் ஹைட் டு ஸ்மோக்" (I STILL HIDE TO SMOKE)** (பிரெஞ்சு: À mon âge je me cache encore pour fumer). *இயக்கம்* - **ரெய்ஹானா ஓபர்மேயர்,** பிரான்ஸ், கிரீஸ், அல்ஜீரியா, 2016.
*நடிப்பு:* ஹியாம் அப்பாஸ், :பாடிலா பெல்கெப்லா, நதியா காசி.
*ஆங்கிலத் துணை வாசகங்களுடன் அசல் அரபு மொழிப்படம். கால அளவு: 1 மணி நேரம் 30 நிமிடம்.*

**பிற்பகல் 5.00 மணிக்கு, "தீப்" (THEEB)** (ஆங்கிலம்: Wolf, அரபு: ذيب). இயக்கம்: **நாஜி அபு நோவர்,** ஜோர்டான், யுகே, 2014
நடிப்பு: ஜாசிர் ஈத் அல்-ஹ்வீட்டாட், ஹுசைன் சலாமே அல்-ஸ்வைல்ஹியீன், ஹசன் முட்லாக் அல்-மரையே
*ஆங்கிலத் துணை வாசகங்களுடன் அசல் ஹெஜாஸி, அரபு மொழிப்படம். கால அளவு: 1 மணி நேரம் 40 நிமிடம்.*




<u>**ஸ்ரீ அன்னையின் மலர் தோட்டம்** (Mother's Flower Garden)</u>

***சோலார் கிச்சன் அருகில், ஆரோவில்***

<u>**ஆன்மீக வாழ்வின் அடிப்படைகள் - என்ற நிகழ்ச்சிக்கான அழைப்பு**</u>

**பிப்ரவரி 21 வெள்ளி, காலை 10:30-11.30 மணி - "The Secret of Flowers" (மலர்களின் இரகசியம்) நாரத் அவர்களின் உரை.**

**மாலை 5 - 6 மணி - ஆரோசத்வானி ஆர்ட் சென்டரின் வீணை இசை நிகழ்ச்சி.**

**பிப்ரவரி 22 சனி, மாலை 5 - 6 மணி - ஸ்வரம் நண்பர்களின் ஆர்கானிக் இசை.**

**பிப்ரவரி 23 ஞாயிறு காலை 7:30 8:30 மணி - நாரதர் அவர்களுடன் தோட்டத்தை ஆராயுங்கள்.**

**பிப்ரவரி 27 வியாழன், மாலை 5 - 6 மணி - பாசாப் சென் & ஷஷ்வத் பரிஹ் வழங்கும் சிதார் இசை.**

**பிப்ரவரி 28 வெள்ளி, காலை 10:15 11:15 மணி- "The Bases of Spiritual Life" (ஆன்மீக வாழ்க்கையின் அடிப்படைகள்) என்ற தலைப்பில் அலோக் பாண்டே அவர்களின் உரை.**

---

<u>**ஒரு அனுபவமிக்க சத்யானந்தா யோகா நிகழ்ச்சி** (An Experiential Satyananda Yoga Program)</u>

**சத்யானந்தா யோகா மையம் மற்றும் பாரத் நிவாஸ் வழங்கும்**
**பிப்ரவரி 22, சனிக்கிழமை, காலை 9 - 12 மணி, சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**

மின்னஞ்சல்: mothersflowergarden@auroville.org.in

"ஒரு அனுபவமிக்க சத்யானந்தா யோகா நிகழ்ச்சி" பிப்ரவரி 22 சனிக்கிழமை அன்று, பாரத் நிவாஸில் உள்ள சாச்சு ஹாலில் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் (சத்யானந்தா யோகா மையம்- சென்னை) இந்த நிகழ்ச்சி முதன்மையாக ஆரோவில் மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் சமூகத்தினரிடையே தகவல்களைப் பரப்ப விரும்புகிறோம். சாத்தியமான வழிகளில் செய்திகளை ஆரோவில்வாசிகளுக்குத் தெரிவிக்க முடிந்தால் அது மிகவும் உதவியாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சி சேவாக (SEVA) ஆக செய்யப்படுகிறது, மேலும் எந்த கட்டணமும் வசூலிக்கப்படவில்லை.
பதிவு செய்வதற்கான இணைப்பை கீழே பகிர்கிறேன். நன்றி. *அன்புடன், டாக்டர் சௌந்தர்யா கே.*
https://www.syctchennai.com/satyananda-yoga-auroville/

---



<u>**ஆரோவில் விழா 2025** (Auroville Festival 2025)</u>

**இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படுகிறது.**
**ஆரோவில் பாரத் நிவாஸ் வழங்கும்**

**கிருபா ரவி அவர்களின் பரதநாட்டியம்**

*கலாக்ஷேத்ரா பாணியில் பயிற்சி பெற்ற பரதநாட்டிய கலைஞரான கிருபா ரவி அவர்களின் கருணை மற்றும் கலைத்திறனுக்கு சாட்சி.*

**21.02.2025 அன்று இரவு 7 மணிக்கு, ஸ்ரீஅரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ், ஆரோவில்**

விசாரணைத் தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211. மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.

---



<u>**ஆரோவில் விழா 2025** (Auroville Festival 2025)</u>

**இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படுகிறது.**
**ஆரோவில் பாரத் நிவாஸ் வழங்கும்**

**குளோபல் திருக்குறள் இசைநிகழ்ச்சி**
*தமிழ், ஆங்கிலம், உருது, இத்தாலியன், பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன்*

வழங்குவோர் - **இந்தியாவைச் சேர்ந்த ஏ ஓபரா - டாக்டர். ஆர். பத்மசானி & அபினவ் ஸ்ரீதரன்**

*கலை, இசை மற்றும் உலகளாவிய மனித விழுமியங்களின் கொண்டாட்டத்தில் பல்வேறு பின்னணியில் இருந்து பார்வையாளர்களை ஒன்றிணைக்கும் ஒரு உருமாறும் கலாச்சார அனுபவம்.*

**25.02.2025 அன்று இரவு 7 மணிக்கு, ஸ்ரீஅரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ், ஆரோவில்**

விசாரணைத் தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211. மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.

---



**ஆரோவில் விழா 2025** (Auroville Festival 2025)

**இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படுகிறது.**
**ஆரோவில் பாரத் நிவாஸ் வழங்கும்**

**சிவாலயாவின் சிவராத்திரி - வழங்குபவர் - இராஜேஸ்வரி சதாசிவம்**

**26.02.2025 அன்று இரவு 7 மணிக்கு, ஸ்ரீஅரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ், ஆரோவில்**

விசாரணைத் தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211. மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.

---

**எஃப்ஏஎம்சியின் அறிவிப்பு** (Announcement from FAMC)

அன்பார்ந்த நண்பர்களே,
ஆரோவில்வாசிகள் அல்லாதவர்களும் எஃப்ஏஎம்சியில் பதிவு செய்யப்படாத பிற நிறுவனங்களும் தங்கள் பயிலரங்குகள், செயல்பாடுகள் போன்றவற்றுக்கான விளம்பரங்களை வெளியிட்டு வருவது அதிகரித்து வருகிறது. அவர்களில் பலர் பணம் வசூலிக்கிறார்கள், நன்கொடைகளை கோருகிறார்கள்.

நியூஸ் அண்ட் நோட்ஸ் விளம்பரம்/அறிவிப்பு எஃப்ஏஎம்சியில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது செயல்பாடுகளில் இருந்து மட்டுமே நியூஸ் அண்ட் நோட்ஸ் குழுவால் வெளியிடப்படும். ஏதேனும் சந்தேகம் இருந்தால், தயவுசெய்து எஃப்ஏஎம்சி நிர்வாக அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

விருந்தினர் சீசனில் இது அதிகமாக உள்ளது, மேலும் இதுகுறித்து இப்போது பல குடியிருப்பாளர்களால் கவனிக்கப்பட்டு எஃப்ஏஎம்சியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து இதைக் கவனித்து நிவர்த்தி செய்யுங்கள்.

*அன்புடன், சந்திரேஷ், எஃப்ஏஎம்சி சார்பாக - நிர்வாகப் பேரவையின் பிரிவு (16)-இன் ஒரு குழு*

---

**மாத்ரிமந்திரில் ஆரோவில் பிறந்தநாள் வார நிகழ்வுகள் - தன்னார்வலர்கள் தேவை**
(Auroville Birthday week events in Matrimandir - seeking for Volunteers)

அன்பார்ந்த நண்பர்களே,
இந்த ஆண்டு, பிப்ரவரியில் மாத்ரிமந்திரில் இரண்டு நிகழ்வுகள் நடைபெறும்:
- பிப்ரவரி 21: ஸ்ரீ அன்னையின் பிறந்தநாள்
- பிப்ரவரி 28: ஆரோவில் பிறந்தநாள்

இந்த நிகழ்வுகளுக்கு வரும் மக்களை நிர்வகிக்க, காலை தியானங்களில் கலந்துகொள்ளும் மக்களை வழிநடத்த உதவுவதற்கு மாத்ரிமந்திருக்குத் தன்னார்வலர்கள் தேவை:
- 21ஆம் தேதி அன்று குறைந்தது 10 தன்னார்வலர்கள்
- 28ஆம் தேதி அன்று குறைந்தது 12 தன்னார்வலர்கள்

இந்த நிகழ்வுகளுக்கு தன்னார்வத் தொண்டு மூலம் பங்களிக்க நீங்கள் விரும்பினால், தயவுசெய்து matrimandir@auroville.org.in என்ற மின்னஞ்சலுக்கு எழுதி உங்கள் தொலைபேசி எண்ணைக் கொடுங்கள்.

உங்கள் பங்களிப்புக்கு முன்கூட்டியே நன்றி, *அன்புடன், மாத்ரிமந்திர் நிர்வாகிகள்*

---

**புதிதாய்ச் சேர்ந்தவர்கள் & புதிதாய்ச்சேர உள்ளவர்கள் ஆகியோருக்கான அழைப்பு**
(Calling all Newcomers & Pre Newcomers)

**பிப்ரவரி 20, வியாழன், மாலை 3 - 5 மணி, யூனிட்டி பெவிலியன்**

**புதிய குழுவை சந்திக்கவும்**
புதிய ஏடிஎஸ்சி (ATSC) செயல்முறையை யார் வழங்குவார்கள், அது எவ்வாறு செயல்படும், உங்கள் தரப்பிலிருந்து என்ன தேவை. அதைத் தொடர்ந்து கேள்வி பதில் அமர்வு. ஒரு தேநீர் அருந்துதல் உடன் இந்நிகழ்வு நிறைவு பெறும்.

புதிதாய்ச்சேர்ந்தவர்கள் மற்றும் புதிதாய்ச்சேர உள்ளவர்கள் (Newcomers & Pre Newcomers) ஆகிய அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். மார்ச் 3 அன்று அடுத்த அமர்வில் இருந்து தன்னார்வலர்கள் மீண்டும் இணைவார்கள். *செயற்குழு*

---

**பயன்பாட்டுச் சான்றிதழ்களில் ஆடிட்டர்கள் கையொப்பமிட வேண்டும்**
(Utilisation Certificates to Be Signed by Auditors)

அனைத்து வெளிநாட்டு நன்கொடை பயனாளிகளும் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தை அறிந்திருப்பீர்கள்.

இனிமேல், நிதியாண்டு 2024-25 முதல் அனைத்து பயன்பாட்டு சான்றிதழ்களும் (UCs),, ஆரோவில் யூனிட்டி ஃபண்டுக்கு சமர்ப்பிக்கும் முன் உங்களது ஆடிட்டர்கள் அதில் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

---

**ஆரோவில் வலைத்தள சேவையின் குறிப்பு** (Note from the Auroville Web Services)

அன்பார்ந்த ஆரோவில்லில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் வைத்திருப்பவர்கள் / நிர்வாகிகள் / மேலாளர்கள் ஆகியோருக்கு, நீங்கள் auroville.org வலைத்தளத்தில் உங்களின் வலைத்தளப் பக்கத்தில் இடுகையிட விரும்பினால் அல்லது தற்போதுள்ள உங்களின் பக்கத்தை மாற்றியமைக்க விரும்பினால், தயவுசெய்து இதற்காக வடிவமைக்கப்பட்ட கூகுள் படிவத்தில் உங்களது விவரங்களை நிரப்பவும். கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தி அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் படிவத்தை அணுகலாம். https://forms.gle/VVpRNZNR7xii7pQS7

சிறு திருத்தங்கள் செய்வதற்கு webcontent@auroville.org.in மூலமாக எங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
வாழ்த்துக்கள், *கிரி, மனோகர், தூர்யா, அபா P. - ஆரோவில் வலைத்தளக் குழு*

---

**சாவி தன்னார்வலர் அறிமுகத் திட்டம் (விஐபி) - மார்ச்சு பதிப்பு**
(Volunteer Introduction Program (VIP) - March Edition)


மார்ச்சு 11-14 முதல் 4 நாட்கள் தன்னார்வலர் அறிமுக நிகழ்ச்சியை சாவி ஏற்பாடு செய்து வருகிறது, ஆரோவில்லின் நோக்கம், அமைப்பு, பலதரப்பட்ட திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைப் பற்றிய விரிவான அறிமுகத்தை வழங்கும் வகையில் இந்நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.
பல்வேறு நிறுவனங்கள் குறித்த விளக்கக்காட்சிகள், ஊடாடும் அமர்வுகள், பல்வேறு இடங்களைப் பார்வையிடுதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். புதிய தன்னார்வலர்களுக்கும் ஆரோவில் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றிய புரிதலை மேலும் அறிந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் இது மிகவும் பொருத்தமானது.
பதிவுக் கட்டணம் (இடங்கள், மதிய உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள் உட்பட):
தன்னார்வலர்கள்: ரூ. 1,200. விருந்தினர்கள்: ரூ. 1,950. 20 பங்கேற்பாளர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
இங்கு பதிவு செய்யவும்: https://forms.gle/2SmR9t2gncx3FCxC8
மேலும் தகவலுக்கு, study@auroville.org.in என்ற மின்னஞ்சலில் சாவியைத் தொடர்பு கொள்ளவும்.

---

**21.02.2025 அன்று - செல்வத் தோட்டம் திறக்கப்படுகிறது, ஸ்ரீ அன்னைக்கு அர்ப்பணிக்கப்படுகிறது**
(21st Feb - Opening of the Wealth garden, an offering to the Mother)

21.02.2025, செல்வம் தோட்டம் சமூகத்தினருக்காக திறக்கப்படுகிறது. ஸ்ரீ அன்னையின் பிறந்தநாளன்று அவருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. மலர் : தண்ணீர் அல்லி, "செல்வம்".
செல்வத் தோட்டம் பற்றிய அன்னையின் கருத்து:
**உண்மையான செல்வம் என்பது ஒருவர் இறைவனுக்கு அர்ப்பணிப்பது தான்.**

---



**மாத்ரிமந்திரில் பிறந்தநாள் வாரம்** (Birthday Week at the Matrimandir)

21.2.2025, ஸ்ரீ அன்னையின் பிறந்தநாள் அன்று
**ஆம்பித்தியேட்டரில் காலை 5.45 - 6.30 மணி வரை தியானம் நடைபெறும்,**
மகாசரஸ்வதி (மேற்கு) வாயில் வழியாக மட்டுமே உள்ளே செல்லவும். காலை 5 மணி முதல் திறந்திருக்கும்
சோலார் கிச்சன் மற்றும் விசிட்டர்ஸ் சென்டர் பக்கத்திலிருந்து வருவோர், **இரண்டாவது ஆலமரத்தில்** வாகனங்களை நிறுத்திவிட்டு, பிறகு நடந்து செல்லவும்.
டவுன் ஹால் பக்கத்திலிருந்து வருபவர்கள்: **மேற்கு வாயில் முன்** வாகனங்களை நிறுத்தவும்.
**அனைவரும் முன்னதாக வந்து 5.40 மணிக்குள் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**
அனுமதி ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே மேலும் காலை 7 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**செல்போன்கள், கேமராக்கள், டேப்லெட்டுகள் மற்றும் பிற ரெக்கார்டிங் சாதனங்கள் ஆம்பித்தியேட்டர் மற்றும் அதைச் சுற்றி அனுமதிக்கப்படாது.** அனைவரும் அவற்றை வீட்டிலோ அல்லது தங்கள் வாகனத்திலோ வைத்துவிட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அத்தகைய பொருட்களை வைத்திருப்பவர்கள் யுனிட்டி பார்க் (ஒருமைப் பூங்காவிற்கு) வெளியே உள்ள 'கஸ்டடி ஃபெசிலிட்டி'யில் டெபாசிட் செய்யவேண்டும். மாத்ரிமந்திர் நிர்வாகம் உங்கள் பொருட்களை மிகுந்த அக்கறையுடன் கையாள முயற்சிக்கும், ஆனால் 'கஸ்டடி வசதி'யில் டெபாசிட் செய்யப்பட்ட பொருட்களின் திருட்டு அல்லது ஏற்கனவே உள்ள சேதங்களுக்கு பொறுப்பாகாது.
**தியானத்தின் மூலம் நிசப்தம் மற்றும் அமைதியான சூழலைப் பராமரிக்க உங்கள் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் அவசியம். தன்னார்வலர்கள் உங்களுக்கு வழிகாட்டவும் உதவவும் பணியில் இருப்பார்கள்.**
**உங்கள் செல்லப்பிராணிகளை உங்களுடன் கூட்டிக்கொண்டு வரவேண்டாம்.**

**21.02.2025, மாலை நிகழ்வு**
**ஆம்பித்தியேட்டரில் மாலை 6 மணிக்கு, சந்திரா அவர்கள் வழங்கும் தியான புல்லாங்குழல் இசை, அனைவரும் வருக.**
மாத்ரிமந்திர் அலுவலக கேட் வழியாக மாலை 5.30 – 5.45 மணிக்குள் மட்டுமே உள்ளே செல்லலாம். விருந்தினர்கள் தங்களுடன் ஆரோகார்டை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
**அனைவருக்கும் பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**தெய்வீகத்துடன் ஐக்கியம் பெறுவது மட்டுமே உண்மையான சுதந்திரம்.**
**ஒருவர் தன் அகங்காரத்தை அடக்குவதன் மூலம் மட்டுமே தெய்வீகத்துடன் ஐக்கியமாக முடியும். -** ***ஸ்ரீ அன்னை***



**திவ்ய சக்தி (Divya Shakti)**

*ஒரு நிருத்ய யோகா, கூட்டு நடனம் - ஸ்ரீ அரவிந்தரின் 'தி மதர்' (The Mother) மற்றும் ஸ்ரீஅன்னையின் 'பிரார்த்தனைகள் மற்றும் தியானங்கள்' (Prayers and Meditations) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.*

**எழுத்தாக்கம் மற்றும் இசை: அர்னாப்.**
**நடன அமைப்பு: மதுமிதா, தேவஸ்மிதா, அனுரேகா, சோனாலி**
**பிப்ரவரி 25 செவ்வாய், இரவு 7 மணிக்கு, மாத்ரிமந்திர், ஆம்பித்தியேட்டர்.**
**காலம்: 1 மணி நேரம்**

நடனம், இசை, தற்காப்புக் கலைகள் மற்றும் யோக ஆசனங்களின் சமகால விளக்கக்காட்சி, ஸ்ரீஅன்னையின் நான்கு அம்சங்கள் மற்றும் அன்னையின் 'பிரார்த்தனைகள் & தியானங்கள்' பற்றிய ஸ்ரீ அரவிந்தரின் பார்வையால் ஈர்க்கப்பட்டவை. ஆரோவில், ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் மற்றும் பிற கலைஞர்களால் வழங்கப்படுகிறது. இந்தியா, இரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பா, ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் மற்றும் ஆரோவில் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட ஆர்கெஸ்ட்ரா இசை நிகழ்ச்சி.

மாத்ரிமந்திர் அலுவலக கேட் வழியாக மாலை 6.30 - 6.45 மணிக்குள் மட்டுமே உள்ளே வரவும். விருந்தினர்கள் தங்களுடைய ஆரோகார்டுகளைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---



**28.2.2025, ஆரோவில்லின் பிறந்தநாள் அன்று**
போன்ஃபயருடன் கூட்டுத் தியானம்
ஆம்பித்தியேட்டரில் காலை 5 முதல் 6.30 மணிவரை
காலை 4 மணி முதல் 5 மணி வரை மற்றும் 5.45 மணிக்கு பிறகு திறந்திருக்கும்
மகாசரஸ்வதி (மேற்கு) வாயில் வழியாக மட்டுமே உள்ளே செல்லவும்.

சோலார் கிச்சன் மற்றும் விசிட்டர்ஸ் சென்டர் பக்கத்திலிருந்து வருவோர், **இரண்டாவது ஆலமரத்தில்** வாகனங்களை நிறுத்திவிட்டு , பிறகு நடந்து செல்லவும்.
டவுன் ஹால் பக்கத்திலிருந்து வருபவர்கள்: **மேற்கு வாயில் முன்** வாகனங்களை நிறுத்தவும்.

**தியானத்தின்போது, காலை 5 முதல் 5.45 வரை வாயில்கள் மூடப்பட்டிருக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.**
தாமதமாக வருபவர்கள் காலை 5.45 மணிக்கு மேல் சேரலாம். அனுமதி ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே மேலும் காலை 7 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**செல்போன்கள், கேமராக்கள், டேப்லெட்டுகள் மற்றும் பிற ரெக்கார்டிங் சாதனங்கள் ஆம்பித்தியேட்டர் மற்றும் அதைச் சுற்றி அனுமதிக்கப்படாது.** அனைவரும் அவற்றை வீட்டிலோ அல்லது தங்கள் வாகனத்திலோ வைத்துவிட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அத்தகைய பொருட்களை வைத்திருப்பவர்கள் யுனிட்டி பார்க் (ஒருமைப் பூங்காவிற்கு) வெளியே உள்ள 'கஸ்டடி ஃபெசிலிட்டி'யில் டெபாசிட் செய்யவேண்டும். மாத்ரிமந்திர் நிர்வாகம் உங்கள் பொருட்களை மிகுந்த அக்கறையுடன் கையாள முயற்சிக்கும், ஆனால் 'கஸ்டடி வசதி'யில் டெபாசிட் செய்யப்பட்ட பொருட்களின் திருட்டு அல்லது ஏற்கனவே உள்ள சேதங்களுக்கு பொறுப்பாகாது.
**தியானத்தின் மூலம் நிசப்தம் மற்றும் அமைதியான சூழலைப் பராமரிக்க உங்கள் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் அவசியம். தன்னார்வலர்கள் உங்களுக்கு வழிகாட்டவும் உதவவும் பணியில் இருப்பார்கள்.**
**உங்கள் செல்லப்பிராணிகளை உங்களுடன் கூட்டிக்கொண்டு வரவேண்டாம்.**

**28.02.2025, மாலை நிகழ்வு**
**ஒருமைக் குளத்தில் மாலை 5.30 மணிக்கு,**
**ஜீன்-கிறிஸ்டோஃபின் ஹிந்துஸ்தானி பாரம்பரிய புல்லாங்குழல் இசை**
**அதைத் தொடர்ந்து கோபிகா, நாடகா வழங்கும் மந்திரம் பாராயணம்**
மாத்ரிமந்திர் அலுவலக கேட் வழியாக மாலை 5.00 – 5.15 மணிக்குள் மட்டுமே உள்ளே செல்லலாம்.
விருந்தினர்கள் தங்களுடன் ஆரோகார்டை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
**அனைவருக்கும் பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**ஸ்ரீ அரவிந்தரின் போதனையின் அடிப்படையில் மனித ஒற்றுமையின் முதல் நிறைவேற்றமாக ஆரோவில் இருக்க விரும்புகிறது, அது அனைத்து நாடுகளைச் சேர்ந்த மனிதர்களுக்கும் வசிப்பிடமாக இருக்கும். -** ***ஸ்ரீ அன்னை***